செய்தி வெளியீடு எண்:238 நாள்: 27.04.2017

## செய்தி வெளியீடு

மக்களின் மன மகிழ்வுக்கு மூலக் கூறாகவும், வேலை வாய்ப்பினையும், அன்னியச் செலாவணியையும் ஈட்டித் தருவதில் முக்கியப் பங்கு வகிக்கும் சுற்றுலாவை மேம்படுத்துதல், தொடர்ந்து அதிகரித்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, புதிய சுற்றுலா மையங்களை தெரிவு செய்தல், சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு எடுத்து வருவதால், சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது.

சுற்றுலாத் துறையின் செயல்பாட்டினை மேலும் ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக, சுற்றுலாப் பயணிகளை பாதுகாப்புடன் சுற்றுலா தலங்களுக்கு அழைத்துச் சென்று, எவ்வித விபத்துமின்றி சிறந்த முறையில் பணியாற்றிய சுற்றுலா சொகுசுப் பேருந்து ஓட்டுநர்கள் திருவாளர்கள் ரவி, பாஸ்கரன், பார்த்திபன், தியாகராஜன், அன்பழகன், விஜயன், தேவ அலெக்சாண்டர், மகுதணன், கண்ணன் மற்றும் வேணு ஆகிய 10 ஓட்டுநர்களின் பணியை பாராட்டும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள் 26.4.2017 அன்று தலைமைச் செயலகத்தில், தலா 4 கிராம் தங்க பதக்கம் மற்றும் சான்றிதழ்களை ஓட்டுநர்களுக்கு வழங்கி பாராட்டினார்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி ந. நடராஜன், தலைமை செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மை செயலாளர் திரு.அபூர்வ வர்மா, இ.ஆ.ப., சுற்றுலா ஆணையர் மற்றும் தலைவர் / தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு வெ. பழனிக்குமார், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை – 9**